
09-12-2016

தி இந்து
தமிழால் இணைவோம்

## 'வார்தா' புயல் வலுவிழக்க வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்




வெள்ளிக்கிழமை காலை 11.30 மணியளவில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படம்.

விசாகப்பட்டினம் அருகே நிலைகொண்டுள்ள 'வார்தா' புயல் வலுவிழக்க வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலசந்திரன் கூறியதாவது:

"தென்கிழக்கு வங்கக் கடலில் உருவான 'வார்தா' புயல் இன்று காலை விசாகப்பட்டினத்தில் தென்கிழக்கே 990 கி.மீ. தொலைவில் நிலைகொண்டுள்ளது.

மணிக்கு 2 கி.மீ. மெதுவாக வார்தா புயல் நகர்ந்துள்ளது. வடமேற்கு திசையில் செல்வதால் வரும் 12-ம் தேதி நெல்லூர்- காக்கிநாடா இடையே கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கரையைக் கடக்கும் முன் வார்தா புயல் வலுவிழக்க வாய்ப்புள்ளது.

மீனவர்கள் ஆந்திர கடற்பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்படுகிறார்கள்.

**66 சதவீதம் மழை குறைவு**

தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவமழை காலத்தில் அக்டோபர் 1-ம் தேதி முதல் டிசம்பர் 8-ம் தேதி வரை இயல்பாக 370 மி.மீ. மழை பெய்திருக்க வேண்டும். ஆனால் 129.4 மி.மீ. மழை மட்டுமே பெய்துள்ளது. இது இயல்பை விட 66 சதவீதம் குறைவு" என்று பாலச்சந்திரன் கூறினார்

## வங்கக் கடலில் உருவான ‘வார்தா’ புயல் 12-ம் தேதி கரையை கடக்கும்: சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

தென்கிழக்கு வங்கக் கடலில் உருவான ‘வார்தா’ புயல் வரும் 12-ம் தேதி கரையை கடக்கிறது. அடுத்த இரு நாட்களுக்கு தமிழ கத்தில் மழை குறைவாக இருக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தாமத மாகவே தொடங்கியது. அதனைத் தொடர்ந்து உருவான இரு புயல் களாலும், தமிழகத்துக்கு குறிப் பிடும்படியான மழை கிடைக்க வில்லை. இதனால் மக்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர். இந்நிலையில் வங்கக் கடலில் புதிய புயல் சின்னம் ஒன்று உருவாகி யுள்ளது. இதனால் தமிழகத் துக்கு போதிய மழை கிடைக் குமா என்பது கேள்விக்குறி யாகவே உள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலசந்திரன் நேற்று கூறியதாவது:

தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமா னது, வலுப்பெற்று, இன்று புயலாக மாறியுள்ளது. ‘வார்தா’ என்று பெய ரிடப்பட்டுள்ள இந்த புயலானது தற்போது விசாகப்பட்டினத்துக்கு தென்கிழக்கே சுமார் 1,060 கி.மீ. தூரத்தில் நிலைகொண்டுள்ளது. அடுத்து வரும் நாட்களில், இது வடமேற்கு திசையில், தெற்கு ஆந்திர கடற்கரையை நோக்கி நகரக்கூடும். இந்த புயல் வரும் 12-ம் தேதி முற்பகலில் நெல்லூருக்கும், காக்கிநாடாவுக்கும் இடையே கரையை கடக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழக மீனவர்கள் வரும் 10-ம் தேதி முதல் ஆந்திர கடலோரப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தமிழகத்தின் தென் கட லோரப் பகுதியில் நிலவிய வளி மண்டல மேலடுக்கு சுழற்சி வலு விழந்துவிட்டது. வடகிழக்கு பருவக் காற்று காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். இப்பகுதியில் அடுத்த இரு நாட்களுக்கு குறிப்பிடும்படியான மழைப் பொழிவு இருக்காது. சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். இவ்வாறு அவர் கூறினார்.

**புயல் எச்சரிக்கை கூண்டு**

புயல் உருவானதைத் தொடர்ந்து சென்னை, கடலூர், நாகப்பட்டினம், எண்ணூர், காட்டுப் பள்ளி, புதுச்சேரி, காரைக்கால், பாம்பன், தூத்துக்குடி ஆகிய துறை முகங்களில் 2-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப் பட்டுள்ளது.

**46-வது புயல்**


புயலுக்கு பெயர் வைக்கும் வழக்கத்தை முதன் முதலில் ஆஸ்திரேலியர்கள்தான் தொடங் கினர். கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக அதை அவர்கள் கடைபிடித்து வருகின்றனர். பிறகு, பல நாடுகளும் புயலுக்கு பெயரிடத் தொடங்கின. அவரவர் விருப்பத்துக்கு புயலுக்கு பெயர் வைப்பதை ஒழுங்குபடுத்த, அந்த விவகாரத்தில், சர்வதேச வானிலை ஆய்வு மையம் தலையிட்டது. பின்னர் ஒவ்வொரு கண்டத்திலும் உள்ள

நாடுகள் ஒன்றிணைந்து புயலுக்கு பெயர் வைக்கும் நடைமுறை உருவாக் கப்பட்டது. இந்த நடைமுறை கடந்த 2004-ம் ஆண்டு அம லுக்கு வந்தது. அன்றிலிருந்து இதுவரை 45 புயல்களுக்கு பெயரிடப்பட்டுள்ளது. அந்த வரிசையில் ‘வார்தா’ புயல் 46-வதாக இடம்பெற்றுள்ளது. ‘வார்தா’ என்றால் உருது மொழி யில் ‘ரோஜா’என்று பொருள். பாகிஸ்தான் நாடு இந்த பெயரை சூட்டியுள்ளது.

**66 சதவீதம் மழை குறைவு**

தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவமழை காலத்தில் அக்டோபர் 1-ம் தேதி முதல் டிசம்பர் 8-ம் தேதி வரை இயல்பாக 370 மி.மீ. மழை பெய்திருக்க வேண்டும். ஆனால் 129.4 மி.மீ. மழை மட்டுமே பெய்துள்ளது. இது இயல்பை விட 66 சதவீதம் குறைவு.

## வங்க கடலில் உருவான ‘வார்தா’ புயல் ஆந்திராவை நோக்கி நகர்கிறது



தென்கிழக்கு வங்கக் கடலில் குறைந்த காற்ற ழுத்த தாழ்வு மண்டலம் உருவானது. அது அடுத்த 24 மணி நேரத்தில் வலுப்பெற்று புயலாக மாற வாய்ப்பு உள்ளது. என்று அறிவிக்கப்பட்டு இருந்தது.

இதற்கிடையில் அந்த காற்ற ழுத்த தாழ்வு மண்டலம் இன்று புயலாக மாறியது.இந்த புயலுக்கு ‘வார்தா’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. விசாகப்பட்டினத்திற்கு தென் கிழக்கில் 1090 கி.மீ தொலைவிலும் மசூலிப் பட்டினத்திற்கு கிழக்கே தென்கிழக்கில் 1070 கி.மி. தொலைவிலும் அது நிலை கொண்டுள்ளது. 12 மணி நேரத்தில் வடக்கு திசை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் அந்த மான் நிக்கோபர் தீவுகளின் சில இடங்களில் பலத்த மழை பெய்யக்கூடும். அந்தமான் தீவு மற்றும் வடக்கு ஆந்திராவை ஒட்டி யுள்ள கடல் பகுதியில் கடல் கொந்தளிப்பாக காணப் படும்.

11-ம் தேதி முதல் ஆந்திராவில் பலத்த மழை பெய்யும். கடலில் பலத்த காற்று வீசும் என்பதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று இந்திய வானிலை அறிவித்துள்ளது.

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறியதால் ஆந்திரா மற்றும் தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு உள்ளது.இதற்கிடையில் காற்று மண்டலத்தில் மேல் அடுக்கு சுழற்சி காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## பணத்தட்டுப்பாடு காரணமாக தென்னைநார் விற்பனை 30 சதவீதம் குறைந்தது



பணத்தட்டுப்பாடு காரணமாக பொள்ளாச்சியில் 30 சதவீதம் தென்னைநார் விற்பனை குறைந்தது.

கருப்பு பணம் ஒழிப்பு நடவடிக்கை

சுல்தான்பேட்டை, பொள்ளாச்சி, நெகமம், கிணத்துக்கடவு உள்ளிட்ட பகுதிகளில் 600 தென்னைநார் உற்பத்தி தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த தொழிற்சாலைகளில் தேங்காய் மட்டையில் இருந்து தென்னைநார் பிரித்து எடுக்கப்பட்டு வெயிலில் உலர வைக்கப்படுகிறது. பின்னர் நாரில் இருந்து கயிறு, மிதியடி, மெத் தை உள்ளிட்ட பல்வேறு மதிப்பு கூட்டப்பட்ட பொருட் கள் தயாரிக்கப்படுகிறது. தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் தென்னைநார்கள் கேரளா, சீனா மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. தினமும் சராசரியாக 4 முதல் 5 கோடி ரூபாய் மதிப்பிலான தென்னைநார் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த நவம்பர் மாதம் 8-ந் தேதி கருப்பு பணத்தை ஒழிக்கும் நடவடிக்கையாக பிரதமர் நரேந்திர மோடி 500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அதிரடியாக அறிவித்தார்.

சம்பளம் வழங்க முடியவில்லை

இதையடுத்து புதிதாக 500 மற்றும் 2000 ரூபாய் நோட்டுகள் புழக்கத்தில் விடப்பட்டது. இருப்பினும் வங்கிகள் மற்றும் ஏ.டி.எம்.களில் பணம் எடுக்க விதிக்கப்பட்ட நிபந்தனைகள் தளர்த்தப்படவில்லை. இதனால் நாடு முழுவதும் பொதுமக்கள் சிரமப்பட்டனர். மேலும் வியாபாரிகள், தொழிற்சாலை உரிமையாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இந்த பாதிப்பு தென்னைநார் உற்பத்தியாளர்களையும் விட்டுவிடவில்லை. இதன் காரணமாக பொள்ளாச்சி, சுல்தான்பேட்டை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் உள்ள தென்னைநார் உற்பத்தியாளர்கள் தொடர்ந்து கடும் பாதிப்பை சந்தித்து வந்தனர். மேலும் வங்கிகளில் பணம் எடுப்பதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு காரணமாக தொழிலாளர்களுக்கு உரிய நேரத்தில் சம்பளம் வழங்க முடியாமல் தென்னைநார் உற்பத்தியாளர்கள் தொடர்ந்து சிரமப்பட்டு வருகின்றனர். இதன் காரணமாக பொள்ளாச்சி தாலுகாவில் தற்போது 30 சதவீத தென்னைநார் தொழிற்சாலைகள் உற்பத்தியை தற்காலிகமாக நிறுத்தி உள்ளது.

30 சதவீதம் விற்பனை குறைவு

இதுகுறித்து பொள்ளாச்சி தென்னைநார் உற்பத்தி சங்க துணைத்தலைவர் சுதாகர் கூறியதாவது:- பொள்ளாச்சி, சுல்தான்பேட்டை, ஆனைமலை, நெகமம் உள்ளிட்ட பகுதிகளில் 600 தென்னைநார் உற்பத்தி தொழிற்சாலைகள் உள்ளன. இந்த தொழிற்சாலைகளில் வெளிமாவட்டத்தை சேர்ந்த தொழிலாளர்கள் அதிக அளவில் வேலை செய்து வருகின்றனர். தென்னைநார் உற்பத்தி தொழிற்சாலைகளின் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஒரு லட்சம் பேர் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர். தற்போது ஒரு டன் தென்னைநார் ரூ.11 ஆயிரத்துக்கு கொள்முதல் செய்யப்படுகிறது. தினமும் 4 கோடி முதல் 5 கோடி வரைக்கும் தென்னைநார் உற்பத்தி செய்யப்படுகிறது. 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று மத்திய அரசு அறிவித்தன் காரணமாக தென்னைநார் விற்பனை 30

சதவீதம் குறைந்துள்ளது. மேலும் சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதும் குறைந்துள்ளது. வங்கிகளில் பணம் எடுக்க கட்டுப்பாடு விதிக்கப்பட்டு உள்ளதால் தொழிலாளர்களுக்கு உரிய நேரத்தில் சம்பளம் வழங்க முடியவில்லை. பெரும்பாலான தொழிலாளர்களுக்கு வங்கிகளில் கணக்கு கிடையாது. தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## பனிப்பொழிவால் வரத்து குறைந்தது: மல்லிகைப்பூவுக்கு கடும் கிராக்கி ஒரு கிலோ ரூ.1,800–க்கு விற்பனை



பனிப்பொழிவு காரணமாக வரத்து குறைந்ததால், மல்லிகைப்பூவுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டு உள்ளது. ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.1,800–க்கு விற்பனை செய்யப்பட்டது.

<u>பனிப்பொழிவால் பாதிப்பு</u>

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பூக்கள் சாகுபடி அதிகமாக நடக்கிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பூக்கள், நிலக்கோட்டை, திண்டுக்கல் பூ மார்க்கெட்டுகளுக்கு மட்டுமின்றி பல இடங்களுக்கு விற்பனைக்கு

கொண்டு செல்லப்படுகின்றன. பூக்கள் உற்பத்தி அதிகளவில் நடக்கும் நிலக்கோட்டை, தமிழகத்தின் 'ஹாலந்து' என வர்ணிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக கடுமையான பனி பொழிந்து வருகிறது. மாலையில் சூரியன் அஸ்தமித்த மறு கனமே பனியின் தாக்கத்தை உணர முடிகிறது. இந்த பனி காலை 10 மணி வரை நீடிக்கிறது. குறிப்பாக அதிகாலை வேளையில் பனியின் தாக்கம் அதிகமாக இருக்கிறது. இந்த பனிப்பொழிவு பூக்கள் உற்பத்தியை கடுமையாக பாதித்து உள்ளது. குறிப்பாக மல்லிகைப்பூ உற்பத்தி கணிசமாக குறைந்துவிட்டது.

<u>ரூ.1,800–க்கு விற்பனை</u>

வழக்கமாக நிலக்கோட்டை பூ மார்க்கெட்டுக்கு, சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து தினமும் சுமார் 5 முதல் 10 டன் வரை மல்லிகைப்பூ விற்பனைக்கு கொண்டு வரப்படும். பனிப்பொழிவு காரணமாக உற்பத்தி கடுமையாக பாதித்து இருப்பதால், வரத்து குறைந்துவிட்டது. இதனால் மல்லிகைப்பூவின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒரு கிலோ ரூ.400–க்கு விற்ற மல்லிகைப்பூ, நேற்று ரூ.1,800–க்கு விற்பனையானது.

இது குறித்து பூ வியாபாரிகள் கூறும்போது, 'நிலக்கோட்டை பூ மார்க்கெட்டுக்கு சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து நேற்று வெறும் 30 கிலோ மல்லிகை பூ மட்டுமே வந்தது. மதுரை, அருப்புக்கோட்டை, வந்தவாசி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மொத்தம் சுமார் 400 கிலோ மல்லிகைப்பூ வரத்து இருந்தது. நிலக்கோட்டை மல்லிகைப்பூ ரூ.1,800–ம், மற்ற மல்லிகைக்கு ரூ.1,700–ம் விலை கிடைத்தது. வரத்து குறைவால் மல்லிகைப்பூவுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டு உள்ளது' என்றனர்.

இதே போல, திண்டுக்கல் பூ மார்க்கெட்டுக்கும் மல்லிகைப்பூ வரத்து கணிசமாக குறைந்தது. இதனால் அங்கும் விலை கடுமையாக உயர்ந்து உள்ளது.

## வெங்காயம் கிலோ ரூ.24–க்கு விற்பனை



மதுரை உழவர்சந்தைகளில் நேற்று ஒரு கிலோ வெங்காயம் ரூ.24–க்கு விற்கப்பட்டது. அதேபோல கத்தரிக்காய் பச்சை ரூ.25, கீரிக்காய் ரூ.33, தக்காளி நாடு ரூ.13, உருட்டு ரூ.12, வெண்டைக்காய் ரூ.15, பீர்க்கங்காய் ரூ.16, புடலங்காய் ரூ.15, சுரைக்காய் ரூ.12, வெள்ளை பூசணி ரூ.10, சர்க்கரை பூசணி ரூ.8, கொத்தவரை ரூ.12, அவரை ரூ.21, மிளகாய் நாடு ரூ.21, குடைமிளகாய் ரூ.30, பஜ்ஜி மிளகாய் ரூ.24, முள்ளங்கி ரூ.12, முருங்கை ஒன்று ரூ.6, மல்லி ரூ.30, புதினா ரூ.20, கறிவேப்பிலை ரூ.30, சேனைக்கிழங்கு ரூ.36, சேம்பு ரூ.30, கருணைக்கிழங்கு ரூ.21, சின்ன வெங்காயம் ரூ.24, பெரிய வெங்காயம் ரூ.14, உருளைக்கிழங்கு ரூ.33, பீட்ரூட் ரூ.14, பீன்ஸ் ரூ.30, முட்டைகோஸ் ரூ.12, காலிபிளவர் ரூ.18, சவ்சவ் ரூ.14, இஞ்சி பழையது ரூ.47 என விற்பனையானது.

## மழையின் காரணமாக கவாத்து செய்யப்பட்ட தோட்டங்களில் கொழுந்துகள் வளரத்தொடங்கின



நீலகிரி மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக கவாத்து செய்யப்பட்ட தோட்டங்களில் கொழுந்துகள் வளரத்தொடங்கி உள்ளன.

கவாத்து

தேயிலை பயிர் இயற்கையில் ஒரு மரம் ஆகும். தேயிலை செடிகளை கவாத்து செய்யாவிட்டால், அது மரமாக வளர்ந்து விடும். இதனா தேயிலை சாகுபடியில் கவாத்து செய்வது முக்கியத்துவம் வாய்ந்தது. 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேயிலை செடிகளை குறிப்பிட்ட உயரத்தில் கவாத்து செய்யும் போது, தரமான பச்சை தேயிலை கொழுந்துகளை பறிக்க இயலும்.

குறிப்பிட்ட காலத்தில் கவாத்து செய்யாவிட்டால் பச்சை தேயிலை கொழுந்துகள் வஞ்சி கொழுந்துகளாக மாறி, தரமற்ற இலைகளாக மாறிவிடும். வஞ்சி கொழுந்துகளால் சரியான எடையும் கிடைக்காது. இதை கருத்தில் கொண்டு தேயிலை வாரியமும், உபாசி வேளாண்மை அறிவியல் மையமும் குறிப்பிட்ட காலத்தில் தேயிலை செடிகளை கவாத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன.

மழை

கவாத்து செய்யப்பட்ட தோட்டத்தில் இருந்து பறிக்கப்படும் கொழுந்து நல்ல எடையுடன் தரமானதாக இருக்கும். இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் லாபமும், வருமானமும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. தற்போது மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தரமான பச்சை தேயிலையை பறிக்க தங்களது தோட்டங்களை தயார் படுத்தி உள்ளனர். கடந்த ஜூலை மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை சிறு விவசாயிகள் தங்களது தோட்டங்களில் தேயிலை செடிகளை கவாத்து செய்தனர்.

கவாத்து செய்த பின்னர் தேயிலை செடிகளில் மட்டம் ஒடிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக மாவட்டத்தில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. அதே போன்று பகல்வேளையில் நல்ல வெயிலும் அடித்து வருகிறது. இந்த இதோஷ்ணநிலை பச்சைதேயிலை வளர்ச்சி உகந்ததாக இருப்பதால் கவாத்து செய்யப்பட்ட தோட்டங்களில் கொழுந்துகள் வளரத்தொடங்கி உள்ளன. ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, மஞ்சூர் பகுதிகளில் கவாத்து செய்யப்பட்ட தோடங்களில் கொழுந்துகள் துளிர்விட்டுள்ளன. இதனை விவசாயிகள் பராமரித்து வருகிறார்கள். இன்னும் சில நாட்களில் இந்த கொழுந்துகள் நன்கு வளர்ந்து பறிக்கும் நிலைக்கு மாறும். இதன் மூலம் பச்சை தேயிலை மகசூல் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் கூறுகிறார்கள்.

## தஞ்சையில் இருந்து சிவகங்கைக்கு அரவைக்காக 800 டன் நெல் சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது



தஞ்சையில் இருந்து சிவகங்கைக்கு அரவைக்காக சரக்குரெயிலில் 800 டன் நெல் அனுப்பி வைக்கப்பட்டது.

நெல் அரவை

தஞ்சை மாவட்டத்தில் ஆண்டுதோறும் குறுவை, சம்பா, தாளடி என முப்போகம் நெல் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். இந்த ஆண்டு குறுவை நெல் அறுவடை செய்யப்பட்டது. இப்படி அறுவடை செய்யப்பட்ட நெல், விவசாயிகளிடம் இருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் பெறப்பட்டு பிள்ளையார்பட்டி, புனல்குளம், வீரமரசன்பேட்டை, பருத்தியப்பர்கோவில், அம்மன்பேட்டை ஆகிய பகுதிகளில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த நெல் அரவைக்காக பிற மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கம்.

அதன்படி பிள்ளையார்பட்டியில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் அரவைக்காக லாரிகளில் ஏற்றப்பட்டு, தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று காலை கொண்டு

வரப்பட்டன. பின்னர் லாரிகளில் இருந்த நெல்மூட்டைகளை தொழிலாளர்கள் சரக்குரெயிலில் ஏற்றினர். மொத்தம் 17 வேகன்களில் 800 டன் நெல் ஏற்றப்பட்டது. பின்பு நெல் மூட்டைகளுடன் சரக்கு ரெயில் சிவகங்கைக்கு புறப்பட்டு சென்றது.

## ஆண்டிப்பட்டி மார்க்கெட்டில் வரத்து குறைவால் மல்லிகைப்பூ விலை கிடுகிடு உயர்வு கிலோ ரூ.2,000–க்கு விற்பனை



ஆண்டிப்பட்டி மார்க்கெட்டில் மல்லிகைப்பூ வரத்து குறைவால் விலை கிலோ ரூ.2,000–க்கு விற்பனை செய்யப்பட்டது.

<u>மல்லிகை பூ வரத்து</u>

தேனி மாவட்டம் முழுவதும் மழை பெய்ய வேண்டிய நவம்பர் மாதத்தில் கடுமையான பனிப்பொழிவு காணப்படுகிறது. இதன் காரணமாக ஆண்டிப்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் விவசாய பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மல்லிகைப் பூக்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் பெரும் பாதிப்பை சந்தித்து வருகின்றனர்.

கடும் பனியால் மல்லிகைப்பூ விளைச்சல் குறைந்து உள்ளது. இதன் காரணமாக ஆண்டிப்பட்டி மார்க்கெட்டிற்கு மல்லிகை பூக்களின் வரத்து

அடியோடு குறைந்து கொண்டே வந்தது. இதனால் மல்லிகைப் பூக்களின் விலை கடந்த சில வாரங்களாகவே உயர்ந்து கொண்டே வந்தது.

<u>கிலோ ரூ.2,000–க்கு விற்பனை</u>

மார்க்கெட்டிற்கு தினமும் சராசரியாக 100 கிலோ முதல் 150 கிலோ வரை மல்லிகைப்பூ விற்பனைக்கு கொண்டு வரப்படும். இந்நிலையில் தற்போது போதிய விளைச்சல் இல்லாததால் ஒரு நாளைக்கு 10 கிலோ முதல் 15 கிலோ மல்லிகைப்பூ மட்டுமே மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

இதனால் கடந்த வாரம் வரையில் ரூ.1300–க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ மல்லிகைப்பூ தற்போது கிடுகிடுவென உயர்ந்து நேற்று காலையில் ரூ.2,000–க்கு விற்பனை செய்யப்பட்டது. இதனால் பூக்களை வாங்க வந்திருந்த மக்களும், சில்லறை வியாபாரிகளும் அதிர்ச்சி அடைந்தனர்.

மழை பெய்ய வேண்டிய நேரத்தில் பனிப்பொழிவு இருப்பதால் பூக்கள் சாகுபடி அடியோடு பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதே நிலை நீடித்தால் மல்லிகைப்பூக்களின் விலை மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாகவும் பூ வியாபாரிகள் தெரிவித்தனர்.

தினமணி

## ஒவ்வாமை நோய்க்கு கறிக்கோழிகள் பலி



தாராபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியில் வளர்க்கப்படும் கறிக்கோழிகள் கடந்த சில வாரங்களாக ஒவ்வாமை நோயால் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கில் இறக்கின்றன. இதனால் பண்ணையாளர்கள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர்.

குறைவாக மழை பெய்வதாலும், வறட்சி காரணமாகவும், கோழி வளர்ப்புக்கேற்ற தட்பவெப்ப நிலை நிலவுவதாலும் தாராபுரம் பகுதியில் உள்ளவர்கள் விவசாயத்தைக் கைவிட்டு கோழிப் பண்ணைகளைத் துவக்கினர்.

முதலில் சிறிய அளவில் துவக்கப்பட்ட கோழிப் பண்ணைகள் தற்போது பெரிய அளவில் வளர்ந்துள்ளன. தாராபுரம், சங்கரண்டாம்பாளையம், வெள்ளியம்பாளையம், உ.ஆலாம்பாளையம் மற்றும் சுற்றுப்புறப்

பகுதிகளில் சிறியதும், பெரியதுமாக 100-க்கும் மேற்பட்ட கோழிப் பண்ணைகள் உள்ளன.
இதில் தினமும் முழு வளர்ச்சி அடைந்த நிலையில் 3 லட்சம் கறிக்கோழிகள் விற்பனைக்குத் தயாராகி வருகின்றன. 10 ஆண்டுகளுக்கு முன் இப்பகுதியில் கோழிப் பண்ணைகள் வந்திருந்தாலும் கடந்த 5 ஆண்டுகளாகத்தான் பண்ணைகளும், கறிக்கோழி உற்பத்தியும் அதிகரித்துள்ளன. பிறந்த 11-ஆவது நாளில் கோழிக்குஞ்சுகள் பண்ணைகளுக்கு கொண்டுவரப்பட்டு, தொடர்ந்து ஊட்டச்சத்து வழங்கப்படும்.
சராசரியாக 5-ஆவது வாரம் தொடங்கி 7-ஆவது வாரத்தில் கோழியின் எடை அரை கிலோ முதல் முக்கால் கிலோ வரை அதிகரிக்கும். 7-ஆவது வாரத்தில் குஞ்சுகள் முழு வளர்ச்சி (2.25 கிலோ) அடைந்து விற்பனைக்குத் தயாராகின்றன.
பொதுவாக தொடக்கத்திலிருந்து சுகாதார சூழலில் கோழிகள் பராமரிக்கப்பட்டால் நோய்த் தாக்குதல் அவ்வளவாக இருப்பதில்லை. சுகாதாரமற்ற சூழலில்தான் வெள்ளைக்கழிசல், ஐ.பி.டி. போன்ற நோய்கள் தாக்குகின்றன. கடந்த சில வாரங்களாக கறிக்கோழிகளை 6 அல்லது 7-ஆவது வாரத்தில் ஒவ்வாமை நோய் தாக்குகின்றது. தாக்குதலுக்கு உள்ளாகும் முதல் நாளிலேயே சராசரியாக 50 முதல் 100 கோழிகள் வரை உயிரிழக்கின்றன.
இந்த நோய் தாக்கியதும் கோழிகளுக்கு சளிப் பிடித்து காய்ச்சல் ஏற்படும். இதனால் கோழிகள் ருசித்தன்மையை இழந்து குறைந்த அளவிலேயே தீவனத்தை உட்கொள்ளும். தொடர்ந்து நுரையீரலை நோய் தாக்கியதும் இறப்பு ஏற்படுகிறது. இதுபோன்ற இறப்பிலிருந்து தப்பிக்கும் கோழிகளின் எடை சராசரி எடையிலிருந்து 500 கிராம் குறைகிறது.
இதுகுறித்து கோழிப் பண்ணை உரிமையாளர்கள் கூறியதாவது: ஒவ்வாமை நோய் தடுப்பு மருந்து மிகவும் விலை அதிகம். இது உற்பத்தி செலவை விட அதிகமாகிறது. அதையும் மீறி செலவு செய்தால் பேரிழப்பு ஏற்படுகிறது. கறிக்கோழிகளின் சந்தை நிலவரம் நிலையற்றதாக இருப்பதால் சிறிய பண்ணையாளர்களால் தாக்குப்பிடிக்க முடிவதில்லை.

ஆந்திரத்தைப் போல் தமிழகத்திலும் கோழித் தீவனங்கள் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகளை சலுகை விலையில் வழங்க வேண்டும் என்றனர். இதுகுறித்து கால்நடை பராமரிப்புத் துறையினர் தெரிவித்ததாவது: பண்ணைகளை சுத்தமாகப் பராமரித்தால் இந்த நோய் தாக்குதல் ஏற்படாது. பொதுவாக குளிர் காலங்களில் கறிக்கோழிகளை இந்த நோய் தாக்குவது இயல்பான ஒன்று. இந்த நோய் தாக்குதல் குறித்து கால்நடை பராமரிப்புத் துறையினருக்குத் தகவல் அளித்தால் தகுந்த ஆலோசனை வழங்கப்படும் என்றனர்.

அழிவின் விளிம்பில் இருந்து வரும் கறிக்கோழிகளை காப்பாற்றுவதன் மூலம் கோழிப் பண்ணையாளர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்ற நிலை உள்ளது. அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு.

## மஞ்சூர் வனப் பகுதியில் மலை நெல்லிக்காய் சீசன் தொடக்கம்




மஞ்சூர் வனப் பகுதியில் மலை நெல்லிக்காய் சீசன் தொடங்கியுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, மலைத் தோட்டக் காய்கறிகள் மட்டுமின்றி பல்வேறு அரிய வகை பழ வகைகளும் உள்ளன. இதில், அரிய

வகை மலைப் பழங்களான பிளம்ஸ், பிச்சர்ஸ், கொய்யா, மாதுளை, சீதாப்பழம், லங்கூட், மலை நெல்லிக்காய், ஆரஞ்ச், விக்கி, பேரிக்காய் உள்ளிட்ட 50-க்கும் மேற்ப்பட்ட பழ வகைகள் உள்ளன. தற்போது மஞ்சூர், கெத்தை பகுதியில் உள்ள அடர்ந்த வனத்தை ஒட்டியுள்ள சாலையோரங்களில் மலை நெல்லிக்காய் அதிகளவில் காய்த்துள்ளது. தற்போது அழிந்து வரும் பழப் பட்டியலில் மலை நெல்லிக்காயும் ஒன்று. இப்பழம் குடியிருப்பு, விளை நிலம், தேயிலைத் தோட்டம் உள்ளிட்டப் பகுதியில் அதிக அளவில் பயிரிடப்படுவதில்லை. இந்தப் பழத்தில் பல்வேறு மருத்தவ குணங்கள் நிரம்பி உள்ளன. ஒரு பழத்தில் இருந்து 650 முதல் 700 மில்லி கிராம் உயிர்ச்சத்து வைட்டமின் சி அடங்கியுள்ளது. மேலும், மலை நெல்லியில் கூடுதலாக பொட்டாஷ் சத்தும் உள்ளது. தற்போது ஒட்டுரக நெல்லிக்காய் சந்தையில் கிடைக்கும் நிலையிலும், இயற்கைச் சூழலில், ரசாயனக் கலப்பின்றி வனத்திலிருந்து கிடைக்கும் மலை நெல்லி மருத்துவக் குணம் நிறைந்ததாகும். இனிப்புச் சுவை குறைந்து, துவர்ப்பு அதிகரித்துக் காணப்படும். வருடத்தில் 8 மாதங்கள் பூவுடன் காணப்படும் இதில் தேன் அதிக அளவு கிடைக்கிறது. அதிக அளவு மகசூல் கிடைக்கும் இந்த மலை நெல்லிக்காய்களை வனப் பகுதியில் அரிதாக, எங்கோ ஒரு மூலையில் காணும் நிலையே தற்போது நிலவி வருகிறது. இதற்கு முக்கியக் காரணம் காட்டுத் தீயாகும். அழிந்து வரும் மலை நெல்லிக்காய் எண்ணிக்கையை அதிகரிக்க தோட்டக்கலைத் துறையினர் மென் திசு ஒட்டு முறையில் கன்றுகள் தயார் செய்கின்றனர். மருத்துவ குணம் நிறைந்துள்ள மலை நெல்லிக்காய் மரங்களைப் பாதுகாத்து ஊக்குவிக்க வனத் துறை முயற்சித்தால் இயற்கை கொடுத்த உயிர்ச்சத்து அனைவருக்கும் கிடைக்கும். இதுகுறித்து, தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறியதாவது: நெல்லிக்காய் உடலுக்கு இளமை தரும் ஓர் ஒப்பற்ற கனியாகும். நெல்லியை, வலிமை நெல்லி, உணவு நெல்லி, அமிர்த நெல்லி என்று கூறுகின்றனர். இதில், பல்வேறு மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன. தாது விருத்தி மற்றும் தலை முடி டானிக்காக பயன்படுத்தப்படுகிறது. இதில், வைட்டமின் சி அதிக அளவில் உள்ளது. பல் நோய், அஜீரணம்,

மூட்டுவலி, பார்வைக் குறைபாடு, பசியின்மை, மலச்சிக்கல், மாதவிடாய், மூல நோய், பெண்களின் கர்ப்பப்பைக் கோளாறு, நீரிழிவு, ரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி ஆகியவற்றுக்கு இது அருமருந்தாகும் என்றார்.

## தெளிப்பான் முறையில் நீர்ப்பாய்ச்சி வளங்களைச் சேமிக்கும் விவசாயி



தெளிப்பான் முறையில் சின்ன வெங்காயப் பயிருக்கு நீர்ப்பாய்ச்சுவதன் மூலம் காலநேரம்,மின்சாரம், தண்ணீர் உள்ளிட்ட வளங்களைச் சேமித்து வருகிறார் இயற்கை வேளாண்மையில் ஈடுபட்டுள்ள பட்டதாரி இளைஞர் ந. திருநாவுக்கரசு.

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டத்துக்குள்பட்ட இரூர் கிராமத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு முதுநிலை பட்டப் படிப்பு (எம்.சி.ஏ) முடித்து,அவருக்குச் சொந்தமான நிலத்தில் சின்ன வெங்காயப் பயிருக்கு நீர்த்தெளிப்பான் முறையில் நீர்ப்பாய்ச்சி வரும் அவர் மேலும் கூறியது: பெரம்பலூர் மாவட்டத்தில் அண்மைக்காலமாக போதிய மழை இல்லாததால் சின்ன வெங்காயம் பயிரிடப்பட்டுள்ள பெரும்பாலான விவசாய நிலங்களில் பயிர்கள் காய்ந்து கருகி வருகின்றன. இதைத்

தவிர்க்கும் வகையில், எனது ஒரு ஏக்கர் பரப்பளவில் முன்னோட்டமாக ரூ. 40 ஆயிரம் மதிப்பில் நீர்த்தெளிப்பான் கருவிகள் மூலம் வெங்காயப் பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்சி வருகிறேன்.

சொட்டுநீர் அல்லது வரப்புகள் மூலம் ஒரு ஏக்கர் நிலத்துக்கு நீர் பாய்ச்ச வேண்டுமெனில் சுமார் 6 மணி நேரமாகும். ஆனால், நீர்த்தெளிப்பான் முறையில் 3 மணிநேரமே போதுமானது. ஒரு ஏக்கருக்கு 100 நீர்தெளிப்பான் கருவிகள் பொருத்தியுள்ளதால், அனைத்து இடங்களிலும் நீர்ப்பாய்ச்ச முடிகிறது.

இதன் மூலம் காலநேரம்,மின்சாரம் ஆகியவை சேமிக்கப்படுவதோடு,தண்ணீர் வீணாவது தடுக்கப்படுகிறது. சொட்டுநீர்ப் பாசன முறையைப் போல், நீர்த்தெளிப்பான் முறைக்கும் வேளாண் துறையினர் மான்யம் வழங்கினால் விவசாயிகள் பெரிதும் பயனடைவர் என்றார் அவர்.

சின்ன வெங்காய உற்பத்தியில் பெரம்பலூர் மாவட்டம் 23% சாகுபடி செய்து மாநிலத்திலேயே முதலிடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.